15 FEB 2000




# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15 - 02 - 2000) VALAMPURI ஒலி: 58


★ பாதுகாப்புச் செலவீனம் அதிகரிப்பு ★ கடவுச் சீட்டு கட்டணம் அதிகரிப்பு

★ தொலைக்காட்சி வானொலி வரி இல்லை ★ சம்பள உயர்வு இல்லை

★ ஓய்வூதிய நிதியம் ஆரம்பம் ★ சீருடை உற்பத்தி நிலையம் ஆரம்பம்

# பொதுசனஐக்கியமுன்னணிஅரசின் ஆறாவது வரவு செலவுத் திட்டம்!

## ஜனாதிபதி நேற்று சமர்ப்பித்தார்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் ஆறாவது வரவு-செலவுத் திட்டத்தில் 9580 கோடி ரூபா துண்டுவிழுந்துள்ளது.

மிலேனியம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் செலவு 32 ஆயிரத்து 980 கோடி ரூபா எனவும்-

வருமானம் 23 ஆயிரத்து 400 கோடி ரூபா எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இதேவேளை பாதுகாப்புக்கு 5200 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டபின் முதல்முறையாக ஆறாவது வரவு-செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்படின் சகலதரப்பினரும் மகிழ்ச்சி அடைவர்

### ஜனாதிபதி சந்திரிகா உரை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் யாப்பானது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமானால் அது சகலருக்கும் மகிழ்ச்சி தருவதாக அமையும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுப்பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி அரசியல் யாப்பை வரைவதில் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதற்கு ஐ. தே.கட்சியும் அதன் தலைவரும் எடுத்திருக்கும் தீர்மானத்தை இட்டு நாமும் நமது அரசும் பெருமகிழ்ச்சி கொண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண பொதுமக்கள் ஏமாற்றம் சமாதானம் பேச்சளவில் மட்டுமே!

### - மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நேற்றுச் சமர்ப்பித்த ஆறாவது வரவு செலவுத்திட்டத்தினால் சாதாரண பொதுமக்கள் விவசாயிகள் ஆகியோருக்கு எதுவிதமான நன்மைகளும் கிடைக்கவில்லை. மாறாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் கொடுப்பதாக இது அமைந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம் நால்வரின் நிலை கவலைக்கிடம்

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலுள்ள தம்மை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கோரி கடந்த ஐந்து நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் 15 படையினரில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நால்வருள் சேரத் ரண் பண்டார(வயது 29) என்பவரின்உடல்நிலைமோசமாகப் பாதிப்படைந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

இதே வேளை நேற்று புதுக்குடியிருப்புக்குச் சென்ற செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் உண்ணாவிரதிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிந்தனர்.

## சாவகச்சேரிசந்தைபகுதி ஷெல்வீச்சில் அதிர்ந்தது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் நேற்றிரவு 9. 30 மணியளவில் அடுத்தடுத்து ஐந்து ஷெல்கள் பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்ததில் சாவகச்சேரி முழு நகரமும் அதிர்ந்த வண்ணமிருந்தன. இந்த ஷெல்களால் ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரிய வரவில்லை.

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டைப் பகுதி சுற்றிவளைப்பு 45 பேர் கைது! இருவர் பெண்கள்!

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதி நேற்றுமுன்தினம் இரவு சுற்றி வளைக்கப்பட்டு விடுதிகள், பஸ்நிலையம் என்பவற்றில் இருந்து 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெண்களாவர்.

கைதுசெய்யப்பட்ட 45 பேரும் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (வ)

## எண்ணெய் விலையை உடன் குறைக்கவும் ரணில் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

உலக நாடுகளில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாகவே இங்கும் எண்ணெயின் விலை உயர்த்தப்பட்டதாக அரசு கூறுவதை ஏற்க முடியாதெென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாத உரையில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்கா எண்ணெய் விலையை அரசு உடனடியாக குறைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளுக்கு உதவுமாறு

## விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனிடம் 21 தொழிற்சங்கங்கள் கோரவுள்ளன

இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைக் கேட்டுக்கொள்வது தொடர்பான கடிதம் ஒன்றைத் தயாரிப்பதற்காக இலங்கை தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி இன்று கொழும்பில் கூடவுள்ளது.

21 தொழிற் சங்கங்களை உள்ளடக்கிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவிமௌலானா தலைமையில் இக் கடிதத்தை தயாரிக்கவுள்ளதுடன், இந்த மாத இறுதிக்குள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலைப்புலிகளின் தலைவருக்கு அக் கடிதத்தை அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் உலகளாவிய ரீதியிலுள்ள தொழிற் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## சங்கத்தானையில் கிரனேட் வீச்சு

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம்ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அப் பகுதியில் சோதனைநடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரு பொலிசார் சிறுகாயங்களிற்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(வ-21)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

கலைஞானி அரும்பொருட் காட்சிச்சாலைக்கு புத்தகம் கட்டுவதற்கு ஒருவரும் உதவியாளர்கள் இருவரும் உடன் தேவை. கலைஞானி பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. (163)

## அறுவடைக்கு அனுமதி இல்லை

[வடமராட்சிகிழக்கு]

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உடுத்துறைப் பகுதியிலுள்ள விவசாயிகள் நெல் அறுவடைசெய்வதற்கு இதுவரை அனுமதி கிடைக்காததினால் இவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. [க-43]

## புதிய கட்டளை அதிகாரி

சாவகச்சேரி கட்டளை அதிகாரியாகவும், சிவில்நிர்வாக இணைப்பதிகாரியாகவும் கடமையாற்றிய சேர்ணல் சமரவீர வடமராட்சி கட்டளை அதிகாரியாகவும் இணைப்பதிகாரியாகவும் பொறுப்பேற்றுள்ளார். (க52)

## மக்கள் மாண்பு

யாழ்ப்பாணம் அரியாலையூரைச் சேர்ந்த ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம் இருபத்தொன்பது வருடங்களாக, ஸ்ரீலங்கா அரசாங்க எழுதுவினைஞராகப் பணியாற்றி, ஈராக்நாட்டிலுள்ள ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தூதுவராலயத்தில் 'செயலாளர்' ஆக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றார்.

1990ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டுவரை யாழ். மாநகரசபையில் தரம்1 வகுப்பில் கடமையாற்றி ஸ்ரீலங்கா வெளிநாட்டு நிர்வாக சேவைப்போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்று இவர் தேர்ச்சியடைந்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை இவர் ஈராக் நாட்டிற்குப் பயணமாகின்றார். இவ்வாறு பயணமாவதையிட்டு உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் தனது நிர்வாகஉறுப்பினர் என்றவகையில் மகிழ்ச்சியோடு வாழ்த்துவதுடன் ஏனைய உள்ளூராட்சி எழுதுவினைஞர்களும் இம்முன்மாதிரியை பின்பற்றி போட்டிப் பரீட்சைகளில் பங்குபற்றிச் சித்திகள்பெற்றுதேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் எங்கள் சேவைக்கு மென்மேலும் சிறப்புப் பெற்றுத்தரவேண்டுகின்றோம்.

செ. சண்முகராசா
செயலாளர்
(உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்)
(யாழ். மாநகர சபை)

### தனங்களப்பு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த

# கைத்தொழிலாளரை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அரச அதிபருக்கு மகஜர்

[சாவகச்சேரி]

தனங்களப்பு, மறவன்புலோ, கொழும்புத்துறை போன்றஇடங்களைச்சேர்ந்த சிறியகைத்தொழில் முயற்சியில் ஈடுபட்டு தற்போது இடம்பெயர்ந்திருப்பவர்களின் வாழ்வு சீர்பெற வழிவகைகள் செய்யவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனுக்குவட பிராந்திய இந்துப் பேரவையின் துணைச் செயலாளர் க.சிவசங்கரநாதன் அனுப்பி வைத்துள்ளார்.

கயிறு திரித்தல், தும்புப் பொருட்கள் போன்றவற்றை உற்பத்திசெய்து தமது சீவனோபாயத்தை நடத்திவந்த மக்கள் திடீரென இடப்பெயர்வை எதிர்நோக்கியமையால் தமது தொழில் உபகரணம் மற்றும் மூலதனங்களை இழந்துள்ளனர்.

இதனால் மீண்டும் தமது கைத்தொழில்களைச் செய்ய முடியாது துன்பப்படும் மக்களை இனம்கண்டு தொழிலைத் தொடரக்கூடிய வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறு அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (க-21)

### இளைஞர்கள் மத்தியில்

# தலைமைத்துவத்தை உருவாக்கும் பணியில் தே. இ. சேவை மன்றம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர்கள் மத்தியில் சிறந்த தலைமைத்துவத்தினை உருவாக்கி அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் உருவாக்கப்பட்டுள்ள 152 இளைஞர் கழகங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் மேலும் 42 புதிய கழகங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக மன்றத்தின் உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான செயல் திட்டங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில்,

மன்றங்களில் தெரிவாகும் நிர்வாக உறுப்பினர்களுக்கான மூன்று நாள் நடாத்தப்படும் திட்டமிடல் பயிற்சியில் 300 இளைஞர், யுவதிகள் பங்கு பற்றுவர்.

தேசிய மொழிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆங்கிலம், சிங்களம் மொழிப் பயிற்சி வகுப்புகள் ஐந்து நாட்கள் நடாத்தப்படும். இவை ஆறு மாதகாலப் பயிற்சியாகும்.

பெண்களுக்கானநடமாடும் பயிற்சி நெறியில் தையல் பயிற்சி, கேக் ஜசிங், சிகை அலங்காரம், பூ செய்தல், பூமாலை செய்தல் போன்றவை மூன்று மாத காலத்துக்கு பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் நடாத்தப்படும்.

மேலும் இளைஞர், யுவதிகள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகளை பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் நடத்தப்படுவதுடன் இவற்றில் கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், எல்லே போன்றவற்றில் போட்டிகளும் நடாத்தப்படும்.

இவை பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்டுபின் மாவட்ட மட்டத்தில் தெரிவாகி அதன் பின் தேசிய மட்டத்திலும் பங்குகொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

இன்று 15-ம் திகதி முதல் 22-ம் திகதி வரை 15 கழகங்கள் நூலகவாரங்களை அனுஷ்டிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வாரத்தின் போது நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்காக நூல்களை பொதுமக்கள் மற்றும்அமைப்புகளிடம் இருந்து திரட்டிக் கொள்ளப்படும்எனவும்உதவி இயக்குனர் குறிப்பிட்டார். (க-77)

## இளைஞர்கழக தடகள போட்டிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் இப்பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான, தடகளப் போட்டிகள் இம்மாத இறுதிக்குள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் சம்பந்தப்பட்ட கழகத் தலைவர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஐ. தபேந்திரன் தெரிவித்துள்ளார். (க-27)

## உற்சவம் நடை பெறுகிறது

[கொடியேற்றம்]

பொலிகண்டி வீரபத்திரர் ஆலயத்தில் கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்களுக்கு திருவிழா நடைபெற்று வருகிறது. (க)

## 950வாகனங்கள் பதிவு

[மானிப்பாய்]

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் அலுவலகத்தில் கடந்த 99ம் ஆண்டு 950 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவ்அலுவலக வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. [க-38]


வர்த்தகப் பெருமக்களே!

உங்கள் வியாபாரம் பெருக இன்றே வலம்புரியில் விளம்பரம் செய்யுங்கள்.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களைத் தாங்கிவர வலம்புரி தயாராகவுள்ளது

விரையுங்கள் விளம்பரம் செய்யுங்கள் வியாபாரம் பெருகட்டும்.


# விளையாட்டுச் செய்தி

## இலங்கை அணி வெற்றி

(திருநெல்வேலி)

கராச்சியில் நேற்று நடைபெற்ற ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 29 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கட் இழப்பிற்கு 274 ஓட்டங்களைப் பெற்றது. மாவன் அத்தப்பத்து ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களையும் சனத் ஜெயசூரிய 54 ஓட்டங்களையும் பெற்றனர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48 ஓவர்களில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

நேற்றைய ஆட்டத்தில் ஆட்டநாயகனாக மாவன் அத்தப்பத்து தெரிவு செய்யப்பட்டார்.

இப் போட்டித் தொடரின் 2 வது போட்டி எதிர் வரும் புதன்கிழமை ஜெரன் பராவில் நடைபெறவுள்ளது. (வ-22)

## இன்றைய கிரிக்கெட் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் 19 வயதிற்கு உட்பட்டோர்க்கான துடுப்பாட்டப் போட்டியில் இன்று 15ம் திகதி யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மோத உள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம் பெறும். (க)

## இல்ல விளையாட்டு

[இளவாலை]

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த 11ஆம் திகதி இடம் பெற்றது.

கல்லூரி அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## இராசி பலன்

15. 02. 2000
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு மாசி 03)

தசமி இரவு 9-36 வரை; மிருகசீரிடம் இரவு 7.22 வரை, சித்தயோகம், இராகு காலம் மாலை 4.04 முதல் 5.32வரை, சுபநேரம் காலை 11.32 முதல் 10.02 வரை.

**மேடம்:** முகம் கோணல், தன்நிலை பாதிப்பு, அகால உணவு,

**இடபம்:** தொழில் சிறப்பு, பெற்றோர் ஆசி, உறவினர்வருகை

**மிதுனம்:** மனச்சுமை, குடும்பவேற்றுமை, உடல் அசதி.

**கடகம்:** கலகலப்பு, காரிய வெற்றி, கீழ்ப்படிதல்.

**சிங்கம்:** முகஸ்துதி, மனமகிழ்ச்சி, பயண அனுகூலம்.

**கன்னி:** தொழில்கஸ்டம், பணியாள் வெறுப்பு, அலைச்சல்.

**துலாம்:** வாக்கு வன்மை, வழிப் பயம், மனக்கோட்டை,

**விருச்சிகம்:** இனிய உறவு, அறிஞர் அறிவுரை, பணவரவு.

**தனுசு:** பிரச்சனைக்கு தீர்வு, பெண் உதவி, விருந்தோம்பல்.

**மகரம்:** முட்டிமோதல், தவறான வழி, ஆவேசம்.

**கும்பம்:** சான்றோர் பகை, தனிமைப்படல். நோய் பாதிப்பு.

**மீனம்:** தொழில் பாராட்டு, நண்பர் வருகை, சென்ற இடத்தில் சிறப்பு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)
- அனுஷியா

## நாளை கருத்தரங்கு

(புலோலி)

உடுப்பிட்டி மகளிர்கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களுக்கான ''எது கர்மயோகம்?'' பற்றிய கருத்தரங்கொன்று நாளை 16 ஆம் திகதி கல்லூரி அதிபர். திருமதி. இ. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமத்தலைவர். சுவாமி சித்ருபானந்தா கருத்துரைகளை வழங்குவார். (க-52)

## பழையமாணவர் சங்கம் அமைப்பு

(மந்துவில்)

மந்துவில் கிழக்கில் அமைந்துள்ள யா/மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாக பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் தங்களதுஅங்கத்துவத்தைஉறுதிப் படுத்திக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கேட்டுக் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-37)

## விளையாட்டு கழகம் உதயம்

[அச்சுவேலி]

அச்சுவேலிப் பிரதேச அனைத்து இளைஞர் யுவதிகளையும் ஒன்றிணைத்து அவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் அச்சுவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. [க-14]

# கொழும்பிலிருந்து உருளைக்கிழங்கு கொண்டு வருவதற்கு தடையுத்தரவு

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டுவருவதால் கொழும்பிலிருந்து உருளைக்கிழங்கு எடுத்து வருவதற்கு தடை விதித்துள்ளதாக யாழ். அரசு அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். விவசாயிகளின் உருளைக்கிழங்கின் விலை தளம்பல் அடையாமால் நியாயமான விலையில் இருப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்-

உருளைக்கிழங்கு கொழும்பில் இருந்து இறக்குமதி செய்வதால்யாழ் விவசாயிகள் எதிர்கொள்ளும் அவலம் குறித்து 'வலம்புரி' பத்திரிகையில் செய்தியும், ஆசிரியர் தலையங்கமும் தீட்டப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-வ-7)

# பாங்ஹொங்கில் நடைபெறும் முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு

(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை உலகமயமாக்கல் பொருளாதாரத்தில் இணைக்கும் வகையிலான முக்கியமாநாடு பாங்ஹொங்கில் அண்மையில் ஆரம்பமாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள்சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இம்மாநாடில் 140 நாடுகளைச்சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

உலகவங்கி அமைப்புக்களின் தலைவர்களும் தாய்லாந்துநாட்டின் பாங்ஹொக் நகரத்தில் கூடியுள்ளனர்.

ஒருவாரகாலம் நடைபெற ஏற்பாடாகியுள்ள இம்மாநாட்டில், இலங்கையின் சார்பில் அமைச்சர் விக்கிரமரட்ண பங்கு கொண்டிருப்பதுடன், சார்க் பிராந்தியத்தின் வர்த்தக நடவடிக்கைகள், மற்றும் உலக பொருளாதார நிறுவனங்கள் தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கோபி அனான் மகாநாட்டு நிகழ்வுகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்து, அபிவிருத்தி அடையும் நாடுகள உலகமயமாக்கலில் பங்கு கொள்ளவேண்டிய அவசியம்பற்றி வலியுறுத்தவுள்ளார்.

(க-9)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# இளைஞர் கழக அங்கத்தவர்களுக்கான ஆங்கில மொழிப் பயிற்சி நாளை ஆரம்பம்

[அச்சுவேலி]

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட இளைஞர்கழக அங்கத்தவர்களுக்கான விசேட ஆங்கில மொழிப் பயிற்சி நெறி நாளை 16ஆம் திகதி அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கோப்பாய் பிரிவு பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் செயலாளரும்இளைஞர் சேவைகள் மன்ற உதவி அதிகாரியுமானஎஸ். கோகுலராஜா தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களைக் கொண்ட இந்த ஆங்கில மொழிப் போதனையில் விசேடமாக ஆங்கில இலக்கியமும் கற்பிக்கப்படவுள்ளது.

சுமார் 75 மாணவர்களை உள்ளடக்கி ஆரம்பிக்கப்படவுள்ள இப் பயிற்சி நெறியின் இறுதியில் தேசிய மட்டத்திலான இறுதிப் பரீட்சை நடாத்தப்பட்டு அதில் சித்தியடைந்தோருக்கு விசேட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

புதிதாக ஆரம்பிக்கப்படும் இந்த பயிற்சி நெறி சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் தினமும் பிற்பகல் 3மணி முதல் 4.30 மணிவரை நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் [க-14]

## வடபகுதியில் கைது செய்யப்படுவோர்

# அரச ஊழியராக காணப்படின் உடன் தொடர்பு கொள்ளவும்

## காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பல்வேறுகாரணங்களால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படுவோர் அரச ஊழியராக இருக்கும் பட்சத்தில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தில் உடன் தொடர்பு கொள்ளுமாறு அச்சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட, அல்லது காணாமல் போனோர் அரசாங்கத்தில் வேலை செய்து கடந்த 3 வருடங்களுக்கு மேலாக எதுவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. என்பதனை உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொடரும் திருப்பணி வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி அருள்மிகு காளியம்மன் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் பங்குனி மாதம் அளவில் இக்கோவிலின் கும்பாபிஷேகம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-5)

# நெல் அறுவடை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற வவுணதீவு, உன்னிச்சைபோன்ற வேளாண்மை பிரதேசங்களில் நெல் அறுவடை ஆரம்பமாகி உள்ளது. 6750 ஏக்கர் காணிகளில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# போரூட் உப - அலுவலகம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசங்க அதிபர் பிரிவில் போரூட்நிறுவனத்தின் செயற்பாடுகளை மேலும் அதிகரிக்கும் நோக்கில், அண்மையில் அப்பகுதியில் போரூட் உப அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(க-75)

# வட அயர்லாந்து சட்ட சபை கலைப்பு அரசியலாளரிடையே கருத்துமோதல்

(பெல்பாஸ்ட்)

வட அயர்லாந்து சட்டசபைக் கலைப்பு தொடர்பாக அங்குள்ள அரசியல்வாதிகளிடையே பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் எழுந்துள்ளதாக அறியமுடிகிறது.

சட்டசபைக் கலைப்புக்குக் காரணம் ஐ.ஆர்.ஏ.இயக்கம் உரிய காலத்தில் ஆயுதங்களைக் கையளிக்காமையே என புரட்டஸ்தாந்து அரசியல் வாதிகள் கூறிவருகின்றார்கள்.

ஆனால் றோமன் கத்தோலிக்க அரசியல்வாதிகளோ பிரிட்டிஷ் அரசின் முழுமையடையாத அரசியல் தீர்வுத் திட்டமே வட அயர்லாந்து சட்டசபைக் கலைப்புக்குக் காரணம் என. குற்றம்சாட்டி வருகிறார்கள்.

வட அயர்லாந்தின் முன்னாள் முதல் மந்திரி டேவிற் ஐ. ஆர். ஏ. எப்போது எங்கே ஆயுதங்களைக் கையளிப்பது என்பதுபற்றி தெளிவானதகவல்களைத்தரவேண்டும் என கேட்டுள்ளார்.

அவ்வாறு அறிவித்தால் தான் மிகவும் மகிழ்ச்சிஅடைவேன் எனவும் கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை —

ஐ.ஆர்.ஏ.மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

(க-9)

# இந்தோனேசிய இராணுவ தளபதியை பதவி விலகுமாறு கோரிக்கை

(ஜகார்த்தா)

இந்தோனேசிய முன்னாள் இராணுவத் தளபதிஜெனரல் விரான்டோவை, பதவிவிலக வேண்டும் என இராணுவத் தலைவர் ஜெனரல் கயிஸ் னோசுதார்சி வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இராணுவ மூத்த தளபதி ஒருவர் ஜெனரல் விராற்டோவை பதவி விலகுமாறு வெளிப்படையாக கேட்டிருப்பது இதுவே முதல்தடவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இராணுவத்தின் ஒட்டுமொத்த கருத்தாக எடுத்துக்கொள்ளக் கூடாதென இராணுவம் சார்பாகப் பேசிய கிராஸ்டோ உசோடோ கூறியுள்ளார்.

அத்துடன், கடந்த ஆண்டு கிழக்குத் தீமோர் மக்களின் கருத்து கணிப்பெடுப்பில் நடந்த வன்முறைகளுக்கு விரான்டோவுக்கும் தொடர்பிருப்பதாக ஐக்கியநாடுகள் மன்றம் தனியாக நடத்திய விசாரணைகளைத் தொடர்ந்து தீர்ப்பளித்தும் —

இதனைத் தொடர்ந்து ஜெனரல் விரான்டோவை பதவி விலகும்படி இந்தோனேசிய அதிபர் அப்துர் ரஹ்மான் வாஷிட் உத்தரவு பிறப்பித்தும், விரான்டோ அதனை மீண்டும் மறுத்து வருவதும் அறிந்ததே.

இதே வேளை, கிழக்குத் தீமோர் படுகொலை சம்பந்தமான முழுமையான அறிக்கைவெளிவரும் வரை, ஜெனரல் விரான்டோ பதவிவிலகத் தேவைஇல்லை என்னும் உடன்பாடு இந்தோனேசிய அதிபருக்கும் விரான்டோவுக்கும் இடையே ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(க-9)

# குரொஸ்னியை கைப்பற்றிவிட்டதாக ரஷ்யர் பெருமிதப்படுவதில் அர்த்தம்இல்லை

## - அதிகாரி தெரிவிப்பு

(குரொஸ்னி)

ரஷ்யப் படைகளின், செச்சினியா மீதான அணுகுமுறை பாரதூரமானதும் விமர்ச்சிக்கத்தக்கதுமான ஒன்றாகும் என மொஸ்கோ அதிகாரி ஒருவர் கருத்துவெளியிட்டுள்ளார்.

ரஷ்யப்படைகள் செச்சினியாவுடன் நடந்துகொண்டமுறையும், அங்கு மேற்கொண்ட தாக்குதல்களும் தவறானது என்று கூறுவதில் இரண்டுபட்ட கருத்து இருக்க முடியாது.

இப்போது நடைபெறும்யுத்தத்தையும் 1994, 1996 க்கு இடைப்பட்ட யுத்தத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் —

செச்சினியர்களின் தாக்குதல் முறை ஒரேபாணியே. தாக்கிவிட்டு மறைந்துவிடுவதே அவர்கள்தாக்குதற்பண்பாக எப்போதுமே உள்ளது.

எனவே, குரொஷ்னியைக் கைப்பற்றி விட்டோம் என வெற்றிப்பெருமிதம் கொள்வது புத்திசாலித்தனமானதல்ல. அவர்கள் தந்திரமாகப் பின்வாங்கி, அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி ஆறுதலாக மலைப்பிரதேசங்களில் இருந்து திட்டமிடுகிறார்கள் என்பதே உண்மை எனவும், மொஸ்கோ அதிகாரி தனது கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

(க-9)

# தென்லெபனானிலிருந்து ஜூலைக்குள் இஸ்ரேல்படை வாபஸ் பெறப்படும்

## இராணுவ அதிகாரி தகவல்

(பெய்ரூட்)

தென் லெப்னான் பகுதிகளில் இருந்து யூலை மாதத்திற்கு முன் இஸ்ரேல் படைகள் வாபஸ். பெறப்பட்டுவிடும் என இஸ்ரேல் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உறுதியளித்திருப்பதாக தெரிய வருகிறது.

ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இஸ்ரேல் படைகள் நிலைகுலைந்து படையணிகளிலும் பாதுகாப்பான இடங்களிலும் பெரிதும் பாதிப்புக்களை ஏற்படுத்தியதை அடுத்தே இஸ்ரேல் இராணுவ அதிகாரி இவ்வாறானதோர் முடிவை அறிவித்திருக்கலாம் என அரசியல் நோக்குனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை,

தென்லெபனானின் பகுதிகளில் இஸ்ரேலும் லெபனானும் மாறி மாறி தாக்குதல்களை நடாத்தி பேரழிவுகளை ஏற்படுத்தி வருவது அறிந்ததே. (க-9)

# உலக வலம்

## 22 பேர் வன்முறையில் பலி

[புதுடில்லி]

கடந்தசனிக்கிழமை இடம்பெற்ற பீகார் மாநில சட்டசபை தேர்தல் முதற்கட்ட வாக்கெடுப்பின் போது இடம்பெற்ற வன்முறை, மற்றும். கண்ணிவெடிச் சம்பவங்களில் மாவட்ட ஆட்சியாளர் மற்றும் 13 பொலிஸார் உட்பட 22 பேர் இறந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க-9)

# ரஷ்ய அதிபர் தேர்தலிற்காக 15 பேர்வேட்பு மனு தாக்கல்

வரும் மார்ச்26இல் நடைபெறவிருக்கும் ரஷ்ய அதிபர் தேர்தலுக்கான வேட்புமனுக்களை 15பேர் தாக்கல் செய்துள்ளார்கள்.

இப்போதைய பதில்அதிபர் விளாடிமிர் புடின், கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் கெனடியுவானோ உள்ளிட்ட 15பேரே அதிபர் தேர்தலில் பங்குபற்றுவதற்கான தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை அதிபர் தேர்தல் தொடர்பாக அண்மையில் ரஷ்யாவில் நடந்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் முடிவுகளின்படி, தற்போதைய பதில் அதிபர் விளாடிமிர் புட்டினே வெற்றிவாகை சூடும் அறிகுறிகள் தென்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

## கூ. மொ. விற்பனை ஸ்தாபனம் நெல்கொள்விலைக்கு 30 கோடி செலவிடும்

[கொழும்பு]

விவசாயிகளிடமிருந்து பெரும் போகநெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 30 கோடி ரூபாவை செலவிடும்.

அமைச்சரவை உபகுழுவின் பணிப்புரைக்கு அமைய இந்ததீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி வெள்ளைப் பச்சை அரிசிநெல் கிலோ 10ரூபா வீதமும், 1கிலோ சம்பாநெல் 11ரூபா வீதமும், 1கிலோசிவப்புஅரிசி நெல்12ரூபா வீதமும் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக கூட்டுறவு மொத்தஸ்தாபனத்தின் பொது முகாமையாளர் உபாலிகூரே தெரிவித்திருக்கிறார்.

பதவியா, ஹொறவப்பொத்தானை பிரதேசங்களில் இம்மாதம் 15ஆம்திகதி முதல் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படும். இந்த மாதம் முடிவதற்கு முன் 52நிலையங்களில் நெல் கொள்வனவை ஆரம்பிக்கப்போவதாககூட்டுறவு.மொத்த விற்பனைஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

மொத்தம் 50ஆயிரம் மெற்றிக்தொன் நெல்கொள்வனவு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.கொள்வனவு செய்யப்படும் நெல் ,நெல் சந்தைப்படுத்தும் சபை, மகாவலி அதிகாரசபை என்பவற்றில் களஞ்சியப் படுத்தப்படும். அதேபோல பதுளை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு கொள்வனவு செய்யும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது என கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன தலைவர் தெரிவித்துள்ளார். (க-7)

# கடந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டும் மட்டக்களப்பில் 4684 பேர் மரணம்

### வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(மட்டக்களப்பு)

கடந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4684 பேர் திடீரென மரணமாகியுள்ளனர். 1991 ஆம் ஆண்டுமுதல் 1999 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியிலேயே மேற்படி தொகையினர் திடீர் மரணங்களுக்கு இலக்காகியுள்ளதாக அம்மாவட்ட வைத்தியசாலை புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

விபத்து, தற்கொலை, ஆட்கொலை, இயற்கை மரணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரங்களில் மரணித்தமை, பாம்புக்கடி, துப்பாக்கிச்சூடு, நீரில் மூழ்குதல், தீப்பிடித்தல் போன்ற சம்பவங்களினாலேயே மேற்படி மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

91 ஆம் ஆண்டு 436 பேரும், 92 ஆம் ஆண்டு 400 பேரும், 93 ஆம் ஆண்டு 416 பேரும், 94 ஆம் ஆண்டு 587 பேரும், 95 ஆம் ஆண்டு 681 பேரும், 96 ஆம் ஆண்டு 548 பேரும், 97 ஆம் ஆண்டு 543 பேரும், 98 ஆம் ஆண்டு 554 பேரும், 99 ஆம் ஆண்டு 519 பேரும் இவ்வாறு திடீர் மரணங்களைத் தழுவியுள்ளனர்.

இவர்களுள் அதிகமானவர்கள் துப்பாக்கிச்சூடு, தற்கொலை போன்ற சம்பவங்களினாலேயே மரணமாகியுள்ளதாகத் தெரியவருகிறது. (க-60)

## மட்டு. விக்கினேஸ்வர வித்தியாலயத்தை இடம் மாற்றுமாறு விமானப்படைஅழுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு விமானப்படை அழுத்தம் தெரிவித்து வருவதாகத் தெரியவருகிறது. மட்டக்களப்புமாவட்டம் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா வட-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகஜயவர்ததனாவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மேற்படி வித்தியாலயம் பொருத்தமான புதிய இடத்தில் நியமிக்கப்படும் வரை தொடர்ந்து அதே இடத்தில் செயற்படும்மென ஆளுநர் இடம்பெயர்வு சேவையில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை ஆளுநருக்கு ஆதாரம் காட்டி செல்வராஜா விளக்கினார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்விஅமைச்சிடம் அறிக்கை சமர்ப்பித்து பாதுகாப்பு அமைச்சிடம் நிதிபெற்று புதிய கட்டடம் நிர்மாணிக்கும்வரை அழுத்தம் தலையீடு இன்றி இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனாவை கேட்டு கொண்டார். (க)

## உயர் அதிகாரி சிறிசேன தலைமையில் அச்சுவேலியில் பொலிஸார் சிரமதானம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த காவல் துறையினர் சிரமதானப் பணிகளை அண்மையில் மேற்கொண்டனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். ஐ. சிறிசேன தலைமையில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் சுற்றுப்புறங்களை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும்—

வைத்தியசாலை ஊழியர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவோர் ஆகியோருக்கு அன்றைய மதியஉணவை வழங்கிச் சிறப்பித்ததாகவும்தெரிய வருகிறது.

52 ஆவது சுதந்திர தின நிகழ்வை ஒட்டிய இந்த ஏற்பாடு மேற்கொள்ளபபட்டதாகவும் தெரியவருகிறது' (க-57)

## கூட்டுறவுச் சங்கத்துக்கு பாராட்டு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், தனது அங்கத்துவ நெற்செய்கையாளர்களுக்கு உரிய நேரத்தில் உரம் ,கிருமிநாசினிகள் போன்றவற்றை பெற்றுக் கொடுத்து, அமோக நெல் விளைச்சலுக்கு உதவி புரிந்தமையை இட்டு அப்பகுதி நெற்செய்கையாளர் ,மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கதலைவருக்குபாராட்டுத் தெரிவித்துள்ளனர். (க 27)

## கண்காட்சி

(கல்வியங்காடு)

அறவழிப் போராட்டக் குழுவின் 21வது ஆண்டு நிறைவை ஒட்டி நடாத்தப்படும் தைத்த ஆடைக் கண்காட்சியும், விற்பனையும் எதிர் வரும் 25ஆம் திகதி அறவழிக் கலையரங்கில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. [க-54]

## கடனுதவி வழங்கல்

(மந்திகை)

கடந்த வருடம் யு.என். எச்.சி.ஆர். வழங்கிய 3 இலட்சம் ரூபா நிதியுதவியில் இருந்து, புலோலி வடமேற்கு விவசாய சம்மேளன அங்கத்தவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக 30 அங்கத்தவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்ட இக்கடனுதவியில் இருந்து, மீளப்பெற்ற பணத்தில் மேலும் மூவருக்கு கடனுதவி வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-23)

### யாழ். மாநகர சபைப் பகுதியில்

## ஜி. ரி. சற்றின் உதவியுடன் 400 குடிநீர் பைப்புகள் நிர்மாணிப்பு

(தென்மராட்சி)

ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம் (ஜீ. ரீ. சற்.) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 400தண்ணீர்ப் பைப்புகளை வீதியோரங்களில் நிர்மானித்துள்ளது.

அத்துடன்30கிலோ மீற்றர் நீளமான குடிநீர் விநியோக அமைப்புகளையும் இதுவரை அமுல் செய்துள்ளது. கோண்டாவிலில் அமைந்துள்ள பாரிய கிணற்றில் இருந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள பாரிய நீர்த்தாங்கிக்கு குடிநீர் மேலேற்ற ஆரம்பித்ததும் தண்ணீர் பைப்புகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

மேற்படி நிறுவனம் யாழ்ப்பாணம் புனரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண மாநகர சபையுடன் இணைந்து குடி தண்ணீர்த் திட்டப்பணிகளை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ந-77)

### மாணவர்களின்

## தேவையற்ற நடமாட்டத்தை தவிர்க்க மானிப்பாய் இந்துவில்'பாஸ்' நடை முறை

[நல்லூர்]

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவர்களின் அநாவசியமான நடமாட்டங்களைத் தவிர்க்கும் நோக்குடன் கல்லூரி நிர்வாகத்தினால் பாஸ்முறை அமுல் படுத்தப்பட்டுள்ளது.

கற்பித்தல் நேரத்தில்மாணவர் ஒருவர் வகுப்பறையை விட்டு வெளியேற வேண்டுமானால் மாணவர் தலைவரிடம் உரிய பாஸ் வாங்கிச் செல்ல வேண்டும்.

அதேபோல வெளியே செல்ல வேண்டுமானால் அதிபரிடம் இருந்து பாஸ் வாங்கிச் செல்லவேண்டும்.

இந்த பாஸ்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால் மாணவர்களின் அநாவசியமான நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (க)

## இராணுவ காவலரண் இடம்மாற்றம்

(நெல்லியடி)

நெல்லியடி கொடிகாமம் வீதியில் இலக்குமி திரை அரங்கிற்கு முன்னால் இயங்கி வந்த இராணுவ காவலரண் கடந்த சில நாட்களின்முன் அதே வீதியில் வேறு வீட்டிற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (க-18)

## மதுபான நிலையங்களில் விற்பனைஇல்லை

(வல்வெட்டித்துறை)

வடமராட்சிப் பகுதிகளில் கசிப்பு உற்பத்திப் பெருக்கத்தினால் உத்தரவு பெற்ற மதுபான நிலையங்களின் விற்பனையின்றி வெறிச்சோடிக் கிடப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ச-16)

## நோய் தாக்கம்

(மந்திகை)

வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காய நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

காலநிலைத் தாக்கமும் மிதமிஞ்சிய பசளைப் பிரயோகமும் இந்நோய்க்கு காரணம் எனத்தெரிவிக்கப் படுன்றது.

அத்துடன் கரணவாய், கரவெட்டி, இரும்புமதவடி ஆகிய இடங்களில் பனிப்பூச்சியின் தாக்கமும் வியாபாரி மூலைப்பகுதியில் முடிவுழுக்கல் நோய்த் தாக்கமும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க- 23 )

### மீளக்குடியமர்வு

## இரண்டாம் கட்ட கொடுப்பனவு 70 பேருக்கு வழங்கப்பட்டது

(அரியாலை)

வன்செயலினால் பாதிப்புற்ற பகுதிகளில் வீடுகள் மீள அமைப்பதற்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவின் நாவாந்துறைப்பிரிவில் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

எழுபது பேருக்குக்தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதனையடுத்து கட்டுமாண வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-36)

## மந்துவில் மேற்கு விவசாய சம்மேளனம் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள்

உலக உணவுத்திட்ட அமைப்பின் நிதி உதவியுடன் மந்துவில் மேற்கு விவசாய சம்மேளனம் சென்ற ஆண்டு பல வேலைத் திட்டங்களைச் சிறப்பான முறையில் செய்து முடித்துள்ளது.

இவற்றில் மந்துவில் கூனிக்கிராய் குளத்திற்கு 3 பக்க அணை கட்டியதுடன் மேலதிக நீரை வெளியேற்றும் கலிங்கும் கட்டப்பட்டது மிக முக்கியமானது.

மற்றும் மயிலங்கிராய் குளம், குமக்களைக் குளம், கும்பாவெளிக் குளம், ஆகிய சிறிய குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பாவனைக்கு உதவாத விதத்தில் காணப்பட்ட விவசாய விளை நிலங்களுக்குச் செல்லும்பல ஒழுங்கைகள் புதிதாக செப்பனிடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (க-39)

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள், பதிவேடுகள் கையளிப்பு

(மட்டக்களப்பு)

இரண்டாயிரம் ஆண்டிற்கான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள அற நெறிப்பாடசாலைகளுக்குரிய பாடசாலைப் பதிவேடுகள் புத்தகங்கள் உட்பட சகல உபகரணங்களும்மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி. தங்கேஸ்வரி கதிராமனிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ள மேற்படி உபகரணங்கள் கையளிக்கும் வைபவம் கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை நாவற்குடா இந்துகலாசார மண்டபத்தில் கலாசார உத்தியோகத்தர் செல்வி.க. தங்கேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

சகல பாடசாலைகளுக்குமான அழைப்பிதழ்களை இந்து சமயகலாசார திணைக்களம் அனுப்பிவைத்துள்ளதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

## வீட்டார் உறக்கத்திலிருந்த வேளை மானிப்பாயில் துணிகர திருட்டு

[யாழ்ப்பாணம்]

ஊரடங்கு நேரத்தில் வீட்டு யன்னல் வழியாக உள்ளே நுழைந்த திருடர்கள் அலுமாரியில் பாதுகாப்பாக வைத்திருந்த தாலிக்கொடி, காப்பு, சங்கிலி உட்பட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்று விட்டனர்.

இத் திருட்டு கடந்த புதன் இரவு மானிப்பாயில் உள்ள சந்திரன் என்பவருடைய வீட்டில் நடைபெற்றது.

வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது பின் புறத்தில் உள்ள ஜன்னல் வழியாக உள்ளே சென்ற திருடர்கள் அங்கு அலுமாரியில் பாதுகாப்பாக வைத்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிக் கொண்டு முன் கதவைத் திறந்து வெளியே சென்று விட்டனர்.

இத் திருட்டுச் சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [க]

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்விடல்.

- குறள்

# வலம்புரி

## கூட்டுறவும் நாட்டுயர்வும்

கூட்டுறவு நாட்டுயர்வு என்பது யதார்த்த உண்மை. அதற்குமேலாக வட புலத்தில் கூட்டுற வால் கட்டட உயர்வு என்றாலும் பொருந்தும். கூட்டுறவின் பிதாமகர் வீரசிங்கத்தின் பெயரால் ஓரே பெரிய மண்டபம் வீரசிங்கம் மண்டபமே. யாழ்ப்பாணத்து விழாத் தேவைகளைப் பூர்த்தி செய்தும் வந்தது. அழாக் குறையாக யுத்த அனர்த் தங்களால் கோலமிழந்து கிடந்தது அம்மண்டபம். பயனுறு மண்டபம் பயன் படவேண்டி பொலிவுடன் புனரமைப்புச் செய்தனர்.

இந்த நிலையில் கூட் டுறவாளர்களின் ஏகோ பித்த உழைப்பும், ஒன்று பட்டுழைத்த செயற் பாடும் கொண்டு எழுந்த அம்மண்டபம் நாட்டு யர்வை நாடி உழைக்கும் கூட்டுறவாளர்க்கே பயன் படவேண்டும். அன்றி சொந்தங் கொண்டாடும் உரிமையும் அன்னவர் களினதே-

இடைக்காலத்தே எழுந்த சலசலப்புக்கள் உரிமை உணர்வைச் சிதைத்திருக்கும். எவரும் சொந்தங் கொண்டாடிப் பயன்படுத்தாத வகையில் கூட்டுறவு அபிவிருத்திக் கும் விரிவாக்கத்திற்கும் பிற அலுவலகப்பயன் பாட்டிற்குமே புகலிட மாக அமைவது நீதியும் நியாயமும் ஆகும்.

மேல் நீதிமன்று இங்கு செயற்பட வேண்டுவது அவசியமே. அந்த செயற் பாட்டிற்கு இயைபுற இடங்காணுதல் இலங்கை அரசின்பொறுப்புமாகும்- புதுக்கிய கட்டடத்தொகு தியோ - புதுக்கட்டிடத் தொகுதியோகண்டுபிடித் தல், கட்டியெழுப்புதல் அன்னவரின் ஆக்கம்.

சி. வீ. கே. என்பவர் செயல் மன்னராக கூட்டு றவு நிலையில் நின்று செயற்படுதல் பாராட்டுக் குரியது. வந்து போகும் ஆணையாளர்களும் மக் கள் நலன் கருதி, உணர்வு புரிந்து உதவுதல் பெரும் பேறெனலாம்- காங் கேசன் வீதியில் அமைந் துள்ள கட்டத் தொகுதி யும்- ஆக்கப்படும் களஞ் சிய நிலையமும் ஆக்கப் பேறுகளாகும்.

நாங்கள் சொற்களைக் குறைத்து செயல்களைக் கூட்டுவேமாமாக- பொறுப்புடன்உழைக்கும் உயர் அதிகாரிகட்கும் கூட்டுறவாளர்க்கும்உதவு கரம் நீட்டுவோமாக.

- அன்புடன் ஆசிரியர்

# கொழும்பிலிருந்து கொண்டு தனி ஒருவனாக தமிழ் இனத்திற்காக குரல் கொடுத்தவர் 'குமார்'

## - நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து கொண்டு தனி ஒருவனாக தமிழ் இனத்திற்காக குரல் கொடுத்த மறத்தமிழன் தான் இந்த குமார்பொன் னம்பலம் என்பதனை தமிழ் இனம் உள்ளவரை மறக்க முடியாது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சாம். செபஸ்ரியன் தலைமையில் இடம் பெற்ற குமார்பொன் னம்பலத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆர்.சி. ஆனந்தராசா மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்;

அதுமட்டுமல்ல ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர் களுக்காக வாதாடியவர். அண்மையில் கூட ஒரு இளை ஞன் கைது செய்யப்பட்ட போது அவனது தாய் கேட்ட தற்கிணங்க அவ் இளைஞனுக் காக வாதாடியது மட்டுமல்ல ஆயிரம் ரூபா கொடுத்த மனிதாபிமானி மறைந்த குமார் பொன்னம்பலம். ஓய்வு பெற்ற பிர தேச செயலர் முருகேச பிள்ளை உரையாற்றுகை யில்.

எமது நாட்டில், தமிழ ராய் பிறந்தவர்கள் படுகின்ற இன்னல்கள் துன்பங்களை வெளிநாட்டவர்கள் புரிந்து கொண்டு, இங்குள்ள இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என குரல் கொடுக் கின்றார்கள் என்றால் சிங்கள அரசுக்கு அழுதங்களை கொடுக்கிறார்கள் என்றால் அதற்கெல்லாம் காரணமாய் அமைந்தவர் குமார்பொன் னம்பலம் தான் என்பதை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

தமிழர்கள் யாவரும் ஒன்று பட வேண்டும். ஒருமித்த கருத்தினராய் செயற்பட வேண்டும் என்பதில் அசை யாத நம்பிக்கை கொண்ட அமரர் அவர்கள், வடக்கு- கிழக்கு மலையகம் என்ற பிரதேச வேறுபாடுகள் களை யப்பட்டு அனைத்து தமிழ் நெஞ்சங்களும் ஒன்றிணைய வேண்டும் என்பதற்காய் இறு திக்காலம்வரை எடுத்த முயற் சிகள் எங்கள் மனதை விட்டு என்றும் அகலாது என்று தெரிவித்தார்.

வடமராட்சி கம்பன்கழக தலைவர் மன்னவன் கந்தப்பு தனது உரையில்,

சொல்லில் ஒன்றும் செய லில் இன்னொன்றுமாய் வாழ் கின்ற சாதாரண அரசியல் வாதியல்ல குமார் பொன் னம்பலம்.

அவர் இறுதிவரை, சொன் னதையே செயற்படுத்தினார் செயற்படுத்துவதையே சொல்லிவந்தார். அதற்காக தனது உயிரையே அர்ப்ப ணம் செய்தார்.

குமார் பொன்னம்பலம் கொழும்பில் வாழ்ந்திருக்க லாம் ஆனால், அவர் ஆத்மா உலகம் அனைத்திலும் வாழ்ந்து வருகின்ற ஈழத் தமி ழினத்திற்காய் அவர்தம் சுபீஷ்ட்சவாழ்வுக்கு நாழும் பொழுதும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்தகால தமிழ் தலை மைகளை விட வித்தியாச மான சிந்தனையோடு ஒரே ஒரு மறத் தமிழனாக ஒரே ஒரு வீரத் தமிழனாக, ஒரே ஒரு ஈழவனாக நம்மிடையே வாழ்ந்து மறைந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம்.

வடபகுதியில் கைதுசெய் யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங் கம் நடாத்திய இந்தநிகழ்வில் வீ.ஜி. தங்கவேல், சீ.வீ. கே. சிவஞானம் உட்படப் பல பிர முகர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். [க]

## கட்டு நாயக்கா சர்வதேச

# விமான நிலையத்தை நவீனதரத்திற்கு உயர்த்தும் வகையில் துரித நடவடிக்கை

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை நவீன தரத்திற்கு உயர்த்தும் வகை யில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாக செய்திகள் தெரிவித் துள்ளன.

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்; ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறு வனம் இதற்கென 12கோடி ரூபாவினை கடனாக தந்து உதவியுள்ளதாகவும் தெரிவித் துள்ளன.

ஒரே சமயத்தில் 21 விமா னங்கள் தரித்து நிற்கும் வகை யில் விமானஓடு பாதைகள் விரிவாக்கம் செய்யப்படும் என்றும் 8பயணிகள் தரிப்பு மடபங்கள் அமைக்கப் படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

1860 மீற்றர் உயரமான மேடை ஒன்று அமைக்கப்படு மெனவும், இத்திட்டமானது இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு பூர்த்தி செய்யப் படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (க)

# வீட்டார்நித்திரையில் இருந்த போது பெறுமதிமிக்க பொருட்கள் திருட்டு

(வல்வெட்டித்துறை)

அல்வாய் வடக்கு மாராம் புலம் எனும் இடத்தில் துணி கர திருட்டுச் சம்பவம் ஒன்று கடந்த 10ம்திகதி இரவு இடம்பெற்றது.

அன்றையதினம் அதிகாலை இரண்டரை மணிக்கு வீட் டார் உறக்கத்தில் இருந்த சமயம் அங்கு சென்ற திருட் டுக் கோஷ்டி அங்கிருந்த இரண்டு லுமாலா சைக்கில் கள், பத்தாயிரம் ரூபா பணம், 3½பவுண் அட்டியல் பொதியிடப்பட்ட பலகாரங் கள் மற்றும் உடுபுடவைகள் என்பவற்றை அபகரித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்திதுறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. (க-16)

# விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப் பிரிவினரால் நடாத்தப்படுகின்ற, பெண்க ளுக்கான ஆடை அமைத்தல், ஆண்களுக்கான மின்னி ணைப்பு ஆகிய பயிற்சிநெறிக ளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தரம் 8 இல் சித்திபெற்ற வர்கள் இப் பயிற்சிநெறிக ளுக்கு விண்ணப்பிக்க முடி யும்.

இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பு யாழ். இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் பாட சாலை நேரத்தில் அதிபரிடம் விண்ணப்பங்களைக்கையளிக் கலாம் எனத் தெரிவிக்கப்படு கின்றது. [க-57]

# வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

நிண்டகாலமாக திருத்தப் படாமல் இருந்த டேவிற் வீதியில் உள்ள மதகு தற் போது திருத்தம் செய்யப் பட்டு வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் யாழ்.மாநகராட்சி மன்றஉறுப்பினர் செல்லையா விஜயரட்ணத்தின் முயற்சி யை யடுத்தே இத்திருத்த வேலைகள் இடம்பெறுகின் றன. (க)

# சட்டத்தரணிஉட்படசமூகசேவையாளருக்கு தும்பளையில் பாராட்டு விழா

(புலோலி)

நீதியமைச்சினால் உத்தி யோகபற்றற்ற சமா தான நீதவானாக வும் நியமிக்கப்பட்ட சட்டத் தரணி ஒருவரையும்: மூன்று சமாதான நீதவான்க ளாக நியமிக்கப்பட்ட சமூக சேவையாளர்களையும் பாராட்டி பருத்தித்துறை தும்பளையில் இவ் விழா நடைபெற்றது.

வடமராட்சிதெற்கு, மேற்கு பிரதேச செயலக நிர்வாக அதிகாரி திரு. ஆர். சிவபுண் ணியம் தலைமையில் இப் பாராட்டு விழா நடைபெற் றது.

சட்டத்தரணி எஸ். பி. சுப்பிரமணியம், இளைப்பா றிய பிரதேசசெயலர் திரு. எஸ். முருகேசபிள்ளை, ஓய்வு பெற்ற கிராம அலுவலர் திரு. வி. சேதுநாயகம் பிர பல வர்த்தகர் திரு. எஸ். பத்மநாதன் ஆகியோரே பாராட்டப்பட்டவர்களா வர்.

இப்பாராட்டு விழாவிலே இலங்கை மின்சாரசபை யாழ். பிராந்திய பொறியிய லாளர் திரு. என். வல்லிபுரம் கலந்து கொண்டார். சிவஸ்ரீ எஸ். சுரேஸ்வரக் குருக்கள் ஆசியுரையையும், ஆசிரியர். திரு. ஆர். குகன் வரவேற் புரையையும் நிகழ்த்தினார் பிரமுகர்கள் பலர் இவ்வைப வத்தில் கலந்து கொண்ட னர். (க-52)

# சுதந்திர மக்கள் கட்சி விரைவில் கிழக்கில் உதயம்

(கல்முனை)

சுதந்திர மக்கள் முன்னனி என்ற பெயரில் புதியஅரசியல் இயக்கம் ஒன்று நேற்றுமுன் தினம் கல்முனை கரையோர முஸ்லிம்களால் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் அரசி யல் பாதுகாப்பை உறுதிப் பத்டுத்துவவதற்கும்இனஐக்கி யத்தைகட்டிஎழுப்புவதுஎன்ற குறிக்கோள்களை முன்வைத் தே இந்தஅமைப்பு உருவாக் கப்பட்டுள்ளதாக அறியப்படு கிறது.

கடந்தகால அரசியல் வாழ் கையில் பாதிக்கப்பட்டவர் களின் தேவைகளை நிறை வேற்றுவதுடன் புதிய அரசி யல் பாதையில் இட்டுச்செல் வது தமது நோக்கம்மென புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பினர் கூறியதாக அறி விக்கப்படுகிறது. (க)

# புத்தூரில் மினி சினிமாவை மூட அப்பகுதி மக்கள் வுற்புறுத்து

புத்தூர் சுன்னாகம் வீதி யில் அமைந்திருக்கும் 'உதயா மினிசினிமாவை' மூடிவிடு மாறு அப்பகுதி மக்கள், மேற் படி மினிசினிமா உரிமையா ளருக்கு வற்புறுத்தல் விடுத் துள்ளனர்.

மினிசினிமாவினால் மாண வர் கல்வி பாதிக்கப்படுவது டன், கலாச்சார சீரழிவு களும் இடம்பெறுவதால் உடனடியாக மினிசினிமா கொட்டகையை மூடி ஒத்து ழைப்பு வழங்குமாறும் —

மீறினால் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப் போவ தாகவும் அப்பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இது தொடர் பான அறிக்கையொன்றினை ஈ. பி. டி. பி. வலி கிழக்கு பிரதேசசபைத் தலைவர், கோப்பாய் பிரிவு அமைப் பாளர் ஆகியோருக்கு வளர் மதி சனசமூக நிலையத்தால் அனுப்பப் பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (க-57)

## வேலணை

# துரைசாமி மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்கு மதிய உணவுவழங்கல்!

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர். வைத்தி லிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் மாண வர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

இப்பாடசாலையில் சுமார் 450 மாணவர்கள் கல்விகற்கி றார்கள் என்றும்; அவர்களுக்கு சத்துணவுகளாக கடலை, பயறு, கௌப்பி ஆகிய உண வுக்ள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான நிதியுதவியினை வெளிநாடுகளிலுள்ள இப் பாடசாலை பழையமாண வர்களின் சங்கக் கிளைகள் கொடுத்து உதவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-75)

## இன்றைய சிந்தனை

மாற்ற வேண்டும் என்று ஆசைப்படுகின்ற போதும் மனதுக்குள் சில முட்டுக் கள் மடங்கிக் கிடக்கும், ஆமாம் இது மனித மன மல்லவா!... மடங்கிய முட்டுக்களை நினைத்துக் கலங்காதே உனது மனி தாபிமானத்தைக் கொண்டு சில முடிவுகளை எடுத்துக் கொள்.

# எமது இராணுவ உத்திகளை வல்லுநர்களால் மதிப்பிட முடியாது

## போர் எழுச்சி மாநாட்டில் சு. ப. தமிழ்ச்செல்வன்

(வவுனியா)

'எமது தேசியத் தலைவரின் இராணுவத் தந்திரோபாயங்களும், திட்டமிடலும், அவரது இராணுவ அணுகுமுறைகளும் தற்போது உலக வல்லுநர்களாலேயே ஆய்வு செய்ய முடியாத – மதிப்பிட முடியாத அதி உன்னத நிலையில் உள்ளன.'

அவரது தலைமையில் அவரது எதிர்பார்ப்புக்களை நீங்கள் நிறைவேற்றுபவர்களாய் இருந்தால் மிக விரைவில் எமது தேசம் விடிவு பெறும்.

இவ்வாறு புதுக்குடியிருப்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற போர்எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: நாங்கள் சென்ற ஆண்டில் ஏற்படுத்திய புதிய இராணுவ வெற்றியும், அதனால் ஏற்பட்ட மாற்றமும் தான் கொழும்பு அரசியலிலும் உலக அரசியலிலும் எமது விடுதலை இயக்கம் தொடர்பான கருத்துக்கள் ஒலிக்கும் நிலையைஏற்படுத்தியுள்ளது.

எமது வெற்றிகளுக்குப் பின்னால் இருக்கின்ற மக்கள் பலம் தான் இந் நிலைக்குக் காரணமாக இருக்கின்றதென்றால் அது மிகையாகாது,

விடுதலைப் புலிகள் இந்த மண்ணில் வாழும் தமிழ் இனத்தின் அபிலாசைகளை நிறைவேற்றும்ஒரு பணியைத் தான் மக்களின் ஆதரவோடு நிறைவேற்றி வருகிறார்கள்.

ஆகவே இராணுவ ரீதியாக எம்மை எப்போதுமே தோற்கடிக்க முடியாது. இங்கு வாழுகின்ற இனத்துக்குச் சரியான, உண்மையான. அபிலாசைகளைத் தீர்த்துவைக்கக் கூடிய ஒரு தீர்வு கிடைக்கின்ற போது தான் இங்கு சமாதானம், அமைதி நிலவும் என்ற செய்தி வெளிப்படையாகின்றது.

நாங்கள் இந்த உலகத்திலே தனித்து விடப்பட்டவர்கள் அல்லர்: நாம் வெற்றி பெற்று நிமிர்ந்து விட்டோம்; உலகத்திலே விடுதலைபெற்றஏனைய இனங்களோடு நாங்களும் இணையாகச் செல்வோம் என்ற நம்பிக்கையினை இந்த மிலேனியம் ஆண்டு எமக்குத் தந்துள்ளது.

ஆகவே நாம் ஓர் உறுதியான வெற்றியைப் பெறுவோம். உலகெங்கும் வாழும் எமது உறவுகளும் எமது விடுதலையை நேசிக்கின்ற அனைத்துச் சமூகத்தினரும் எமது தேசத்தின் விடுதலைச் செய்தியைக் கேட்க ஆவலுடனும் பெரும் எதிர்பார்ப்புடனும்இருக்கின்றார்கள் என்று அவர் கூறினார்.

### சாதாரண...

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தவரவுசெலவுத்திட்டம்சம்மந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப்பட்டியல் எம்.பி.மாவைசேனாதிராஜா வலம்புரிக்குத் தெரிவித்தார்-

வரவு செலவுத்திட்டம் தொடர்பாக மாவை சேனாதிராசா எம். பி. மேலும் வலம்புரிக்குத் தெரிவிக்கையில் கூறியதாவது,

சமாதானம் என்று பேச்சளவில் கூறிக்கொண்டு அதே வேளை பாதுகாப்புச் செலவினங்களுக்கு 5,200 கோடி ரூபா ஒதுக்கியிருப்பதன் நோக்கம் என்ன? நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு போதியளவு நிதியை ஒதுக்காமல் பாதுகாப்புச் செலவினத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கியிருப்பதினால் பாரதூரமான பொருளாதார பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக மண்ணெண்ணையின் விலையை அதிகரித்ததின் மூலம் குறிப்பாக யாழ்ப்பாண விவசாயிகளுக்கும் மேலும் ஒரு படி சுமையை அவர்கள் மீதே சுமத்தவிருப்பதாகவே உள்ளது என்றார்.

அரசாங்கம் பாதுகாப்பு செலவீனங்களுக்கு கூடியளவு பணத்தை ஒதுக்கி அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை குறைத்து வெற்றி காணலாம் என்று எண்ணுவதற்கு சமமாகும் விடுதலைப்புலிகளின் பலத்தைக் குறைத்து அவர்களுடன் பேச்சு நடத்தலாம் என்று எண்ணுவதும் தமிழ் மக்களுக்கு பாதகமான நிலையே என்று கூறிய மாவை சேனாதிராசா பலமுள்ள நிலையில் தான் விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்று குறிப்பிட்டார். (வ)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்

### சாவகச்சேரி...

...னத்தில் நேற்றுக்காலை 7.30 இற்கு மூன்று எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

இதனையடுத்து மக்கள் பீதியடைந்து நகரப்பகுதியை விட்டு வெளியேறினர் சந்தைக்கு வந்த பெருமளவு மரக்கறிகள் வேறிடங்களிற்கு கொண்டு செல்லப்பட்டன. மேலும் பெருமளவு மீன்கள் சந்தைக்கு வந்த போதிலும் வியாபாரிகளோ கொள்வனவாளர்களோ குறைவாக காணப்பட்டமையால் அவை யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டது.

காலை 9. 50 அளவில் ஓர் எறிகணை மீன் சந்தையை அண்டிய மைதானப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது இதனால் சேதம் எதுவும்

# தனங்களப்பில் ஷெல் தாக்குதல்

தனங்களப்புப் பகுதியில் நேற்று அதிகாலை தொடக்கம் துப்பாக்கிச் சத்தங்களும் எறிகணைச் சத்தங்களும் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தன இது தொடர்பான சேத விபரம் தெரியவில்லை.

### பொதுசன...

அம்சங்கள் வருமாறு:-

★ கடவுச் சீட்டுக் கட்டணங்கள் அதிகரிப்பு.

★ தொலையும் கடவுச் சீட்டு கட்டணம் 1000 ரூபாவில் இருந்து 10,000ரூபாஅதிகரிப்பு (பத்து மடங்கு அதிகரிப்பு)

★ ஒரு நாளில் பெறும் கடவுச் சீட்டு கட்டணம் 3000 ரூபாவில் இருந்து 5000 ரூபா வரை அதிகரிப்பு.

★ மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒருநாளில் பெறும் கடவுச்சீட்டுக் கட்டணம் 1500 ரூபாவில் இருந்த 2000 ரூபா வரை அதிகரிப்பு.

★ சாதாரணமான கடவுச் சீட்டுக் கட்டணம் 300 ரூபாவில் இருந்து 500 ரூபா வரை அதிகரிப்பு.

★ சாதாரண சர்வதேச கடவுச்சீட்டு கட்டணம் 1750 ரூபாவில் இருந்து 2500 வரை அதிகரிப்பு.

★ வானொலி, தொலைக் காட்சி வருடாந்தக் கட்டண

# எரிபொருள் விலை அதிகரிப்பால் மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கலாம்?

(கொழும்பு)

டீசல் மண்ணெண்ணெய் மற்றும் காஸ் விலைஉயர்வையடுத்து மின்கட்டணமும் 25சதவீதத்தால் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது,

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாலும் நாட்டின் மின்சார விநியோகத்தில் 30சத வீதம் அனல் மின் நிலையங்களூடாகவே வழங்கப் படுவதாலுமே இவ்வாறு மின்கட்டணம் அதிகரிக்கப்படலாம் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மின் கட்டண அதிகரிப்புக் குறித்து மின்சார சபையின் வரிப்பிரிவு ஆராய்ந்து வருவதாகவும் அதன் பின்பே கட்டண அதிகரிப்புக் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அதுவரை இப்போதுள்ள கட்டணங்களையே பாவனையாளர் செலுத்தலாம் என்றும் மின்சக்தி மற்றும் எரிபொருள்த்துறை அமைச்சின் செயலாளர் ஆனந்தகுணசேகர தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு ஏற்பட்ட மின்சார நெருக்கடியை அடுத்து 1998ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மின்சாரக்கட்டணங்கள் 15சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டமை தெரிந்ததே, (வ-4)

# யாழ். நகரில் நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் படையினரால் கைது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலிருந்து நேற்று முன் தினம் இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டதாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பூலோகசுந்தரம் செல்வநேசன் வயது 23,6ம் வட்டாரம் நாவாந்துறையை சேர்ந்தவரும், கொன்சன்றயின் றெசான் வயது 25 குருநகரை சேர்ந்தவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவார்.

இவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து இவர்களது உறவினர்களிடம் படையினரால் பற்றுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

[க-2]

# விமலாதேவியின் மரணவிசாரணை நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை உடுவில் செபமாதா கோயிலடியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் போது மரணமான செல்வநாயகம் விமலாதேவி (வயது 32) என்பவரின் மரணவிசாரணை நேற்று மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் எம். சபாநாதன் தலைமையில் இடம்பெற்றது.

விசாரணையைத்தொடர்ந்து சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்த நீதிபதி சடலத்தை தகனம் செய்யாது புதைக்குமாறு உத்தரவிட்டார். (ந)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

பல்வேறு மோதல் சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

★ லெப். கேணல் கிருபா (நடேசு- சிவஞானபோதி) பூநகரி

★ 2ம் லெப். பகீர் சோழன் (குகநாதன்-நாதஸ்வரன்) திருமலை

வீரவேங்கைகளான

★ மதி அரசன் (இரட்ணம் செல்வராஜ்) யாழ்ப்பாணம்

★ தீபா என்றழைக்கப்படும் செண்பகா (அசோகன் சங்கீதா) யாழ்ப்பாணம் (ந)

### எண்ணெய்...

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான உரையில் ஜனாதிபதி நேரில் கலந்துகொண்டு உரையாற்றியமைக்குத் தான் நன்றிதெரிவிப்பதாகவும் கூறினார். (ந)

### அரசியல் யாப்பு...

...டிருப்பதாக கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்

நாட்டின் பொருளாதார ஸ்திரப்பாடு, மொத்த

உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிலைமைகள் புதிய முயற்சிகள் மீதான முதலீட்டை அதிகரிக்கச் செய்துள்ளன.

ஏற்கனவே அரச ஊழியர்

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
பிரசாந், ரியாசென்
நடித்த
## குட்லக்
(புதிய வெளியீடு)
10. 30, 2. 30 (ப.நே)
வெட்டுப்படாத
முழுமையான நேரடி
CD யில் காண்பிக்கப்படும்
மகளிருக்கு இடமுண்டு
(00115)

எறிகணை மீன் சந்தையை அண்டிய மைதானப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

நேற்று முன்தினம் இரவு எறிகணை சாவகச்சேரி சந்தை மரக்கறி விற்பனை கூரைச் சீற்றில் வீழ்ந்து வெடித்ததில் பல சீற்றுக்கள் கூரை மரங்கள் கட்டடத்தின் நிலப்பகுதி, வியாபாரிகளின் எஞ்சிய மரக்கறிகள் என்பவை சேதத்திற்குள்ளானது. இக்கட்டடம் ஓரிரு ஆண்டுகளில் புதிதாக அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-21)

# நன்றி அறிவித்தல்

யா/யாழ் மத்திய கல்லூரி மாணவன் சி. மயூரன் ஆகிய எமது மகனின் விசேட அடையாள அட்டையை ''வலம்புரி'' பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைத்தவருக்கும் அச்செய்தியைப் பத்திரிகையில் பிரசுரித்து எமது கையில் கிடைப்பதற்கு உதவிய ''வலம்புரி'' பத்திரிகை ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் இறைவன் எல்லா அருளும் வழங்கப் பிராத்திக்கின்றோம்.

பெற்றோர்
திரு.திருமதி. வி.சிவநேசன்
(164)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ரூபாவில் இருந்து 2500 வரை அதிகரிப்பு.

★ வானொலி, தொலைக் காட்சி வருடாந்தக் கட்டண அறவீடு இல்லை.

★ சம்பள உயர்வு உடனடியாக இல்லை.

★ சம்பளத்தை மீளய்வு செய்ய விசேட ஆணைக்குழு நியமிக்கப்படும்.

★ ஓய்வூதியம் பெறுவோருக்கு தேசிய திட்டம் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கென தனியான நிதியம் அமைக்கப்படும்.

★ பாதுகாப்புப் படையினருக்கு பாதணிகள், சீருடை, தொப்பி செய்வதற்கு ஒரு உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்படும்.

★ அரிசி, சீனி, மா, உருளைக்கிழங்கு இவற்றுக்கு 35%வரி தொடர்ந்தும் இருக்கும்.

★ இறப்பின் பின்னான இறுதிக்கிரியைகள், செயற்கைக்கால், ஊன்றுகோல், காதுகேட்கும் கருவிகள், சக்கரநாற்காலிகள், பயிர் மற்றும் விலங்குவளர்ப்பு, காப்புறுதி, வேலைத்தளங்களில் ஊழியர்களுக்கு வழங்கும் உணவு போன்றவற்றிற்கு பொருட்கள் சேவைகள் மீதான வரி விலக்கப்பட்டுள்ளது.

★ உள்நாட்டு கைத்தொழிலை ஊக்குவிக்க சீமெந்து, மரம் தொழில் உட்பட்ட அனைத்துப் பொருட்கள் தொடர்பாக வரி விலக்கு நீடிக்கப்படும். (வ)

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்

நாட்டின் பொருளாதார ஸ்திரப்பாடு, மொத்த தேசிய வருமானம், உற்பத்தி வெகுசனத் தொடர்பு சாதனம், தேசிய பாதுகாப்பு என்பவை குறித்த பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும்.

1995 ம் ஆண்டு 4% ஆக இருந்த மொத்ததேசியஉற்பத்தியின் வளர்ச்சி வீதம் எமது அரசு பதவியேற்ற பின்னர் 5% ஆகவும் தனிநபர் வருமானம் 450 அமெரிக்க டொலர்களில் இருந்து 1000 அமெரிக்க டொலர்களாகவும் அதிகரித்துள்ளது. இந்தத் தொகை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் 2500 அமெரிக்க டொலர்களாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

மேலும் நாட்டில் இருந்து வந்த பணவீக்கம் எமது அரசின் பதவிக்காலத்தில் 05 சத வீதம் ஆகவும் வங்கிக் கடன் மீதான வட்டி வீதம் 20% இலிருந்து 12 வீதம் ஆகவும் வேலையற்றோர் எண்ணிக்கை 8 இலட்சத்திலிருந்து 6இலட்சமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் 70 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு தேசிய சேமிப்பு வீதம் 17.8 வீதத்திலிருந்து 23வீதம் வரை

நிலைமைகள் புதிய முயற்சிகள் மீதான முதலீட்டை அதிகரிக்கச் செய்துள்ளன.

ஏற்கனவே அரச ஊழியர்களின் சம்பளம் 50 வீதத்திலிருந்து 80 வீதம்அரசுஉயர்த்தப்பட்டுள்ளது. இவ் வீதம் மேலும் அதிகரிக்கப்படும். வேலை கொள்வோர் ஊழியர் கணக்கை மேம்படுத்த முத்தரப்புக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி தொடர்ந்து தனதுரையில் தெரிவித்ததாவது:

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பானது வறுமை நிலையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. இதனைப் போக்க விலைக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் எனவும், வரிகள் மீதானபுதிய நடைமுறைகள் பின்பற்றப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் 8வீதம் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றதென்றும் மொத்தத் தேசிய உற்பத்தியின் பெரும் பங்கு பாதுகாப்புக்கு செலவிடப்படுவதால் அபிவிருத்தித் திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படாது உள்ளதாகவும் எனவேஇச்செலவைக் குறைப்பதன் மூலம் துரிதமான அபிவிருத்தியை அடைய முடியும் எனவும் குறிப்பிட்டார். எனினும் பாதுகாப்புச் செலவை குறைப்பது தொடர்பான எந்தவொரு உறுதி மொழியையும் ஜனாதிபதி சபையில் வழங்கவில்லை.